# DELIGHT – 2019

## HOLINESS & SEPARATION

### Song Sheet

### Song 1

1. இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே - 4

துதி பாடல் நான் பாடி
இயேசுவையே போற்றி
என்றென்றும் வாழ்ந்திடுவேன்

அல்லேலூயா ஆமென் அல்லேலூயா - 4

2. சமாதானம் தந்தார் இயேசு - 4

3. புதுவாழ்வு தந்தார் இயேசு - 4

4. விடுதலை தந்தார் இயேசு - 4

5. அபிஷேகம் தந்தார் இயேசு - 4

-----------------

### Song 2

இயேசுவே வழி சத்தியம் ஜீவன்
இயேசுவே ஒளி நித்தியம் தேவன்

1. புது வாழ்வு எனக்கு தந்தார்
சமாதானம் நிறைவாய் அளித்தார்
பாவங்கள் யாவும் மன்னித்தார்
சாபங்கள் யாவும் தொலைத்தார்
கல்வாரி மீதில் எனக்காய்
தம் உதிரம் சிந்தி மரித்தார்
மூன்றாம் நாளில் உயிர்த்தார்
உன்னதத்தில் அமர்ந்தார் - இயேசுவே

2. நல் மேய்ப்பனாக காத்தார்
என் தமையனாக பிறந்தார்
என் நண்பனாக வந்தார்
என் தலைவனாக நின்றார்
மேகங்கள் மீதில் ஓர் நாள்
மணவாளனாக வருவார்
என்னை அழைத்துக்கொள்வார்
வானில் கொண்டு செல்வார் - இயேசுவே

3. உனக்காகத் தானே பிறந்தார்
உனக்காகத் தானே வளர்ந்தார்
உனக்காகத் தானே மரித்தார்
உனக்காகத் தானே உயிர்த்தார்
இன்றும் என்றும் நமக்காய்
அவர் ராஜாவாக இருப்பார்
மார்பில் என்றும் அணைப்பார்
தூக்கி உன்னை சுமப்பார் - இயேசுவே

-----------------

### Song 3

இயேசு போதுமெனக்கு
அழியும் உலகினிலே
வேறு ஒன்றும் நாடேன்
இயேசு போதுமெனக்கு

1. கண்கள் காணும் பூமி மீதில்
யாவும் நிலைப்பதில்லை
அழியா ஒன்று தருவார் இன்று
இயேசுவை நாடுவேன் - இயேசு

2. உடுப்பும் மாறும் நட்பும் மறையும்
உறவும் நிலைப்பதில்லை
மாறா ஒன்று நிலைப்பதுண்டு
பெற்றுக்கொள்ள வந்தேன் - இயேசு

3. காடும் வீடும் சீரும் சிறப்பும்
கூட வருவதில்லை
ஒன்றே ஒன்று வருவதுண்டு
இயேசுவின் அன்பு - இயேசு

-----------------

### Song 4

கர்த்தனே என் துணையானீர்
நித்தமும் என் நிழலானீர்
கர்த்தனே என் துணையானீர்

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தனே அடைக்கலமாயினார் - 2
மனுமக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர்

2. பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் - 2
ராஜா உம் அன்பு என்னைக் கண்டது
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் - 2
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா, உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
ராஜனே உம்மைப் பாடக் கூடுமோ - 2
ஜீவனை உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை

-----------------

### Song 5

1. உன்னை தேடித் தேடி வந்தேன்
உன்னை காணவில்லையே
என் சத்தத்தை கேட்டு பயந்து
நீ ஒளிந்துகொண்டாயே

2. நீர் விலக்கி வைத்த கனியை
நான் விரும்பி புசித்தேனே
குற்றவாளியாய் தலை குனிந்து
நான் தயங்கி நிற்கிறேனே

3. நீ விலகி விலகி போனாய்
உன்னை விட மனமில்லையே
நான் தவித்து உயிரே கொடுத்து
உன்னை மீட்டிட வந்தேனே

4. நான் விலகி விலகி ஓடி
எந்தன் நிம்மதி இல்லையே
இந்த பாவியை இழுத்துக்கொள்ளும்
நான் வழுவிப்போகிறேனே

என் ஏக்கமும் என் நாட்டமும் உந்தன் சந்நிதானமே
என் துடிப்பும் என் தவிப்பும் உந்தன் பரிசுத்தம்தானே
நான் கெஞ்சி கேட்கிறேன் என் தாகம் இதுதானே
நீர் மாத்திரம் நீர் மாத்திரம் போதுமே

5. நீ சறுக்கி சறுக்கி விழுந்தும்
நான் சலிக்கவில்லையே
இந்த அன்பென்னும் ஜுவாலையை அணைக்க
ஒரு வெள்ளமும் இல்லையே

6. உந்தன் அன்பதை விளங்கிக்கொண்டேன்
என்னை உமக்கு தந்தேனே
இந்த பாவியை பிடித்துக்கொள்ளும்
நீர் மாத்திரம் போதுமே

-----------------

## Song 6

தீதான வழியில் திசை மாறி நான்
அலையுண்ட படகாய் திகைக்கின்றேனே
நான் செய்த பாவம் தீர்ந்திடவே
என்னையும் மன்னியும் நாதா - அருளால்
என்னையும் மன்னியும் நாதா
என் தேவனே என் நேசரே
இப்பாவி என்னை ஏற்றுக்கொள்ளுமே
நான் விழுகிறேன் உம் பாதத்தில்
உம் தயவால் தள்ளாமல் காத்திடும்

-----------------

## Song 7

தனிமரமாய் தவிக்கிறேனே மாயமான வாழ்வினிலே
உம்மை அன்றி கதி இல்லையே ஏதுவில்லா ஏழை எனக்கே
இணைப்பிரியா உமதன்பிலே நீடூழியாய் வாழ்ந்திடவே
எந்தன் உள்ளம் தேடிடுதே தூயனே உம் சமூகம்
அஞ்சி அஞ்சி நிற்கும் என் பயத்தை
நேச கரத்தால் மாற்றிடுமே
கெஞ்சி கெஞ்சி வந்தேன் உம் சமூகம்
உம்மோடு மகிழ்ந்திடவே

-----------------

## Song 8

1. நான் சென்ற பாதை விசாலமும்
அழகாகவும் தோன்றியதே
என் கண்களை கவர்ந்து கொண்டதே
என் நிர்விசாரமும் அகங்காரமும்
என்னை நியாயம் பேச வைத்ததே
உம் சித்தம் செய்ய சிந்தை இல்லையே

நீர் சொன்னது சரி தான் என் நாயகனே
நான் புத்தியற்றுபோன பாவிதான்
நீர் சொல்வதை செய்கிறேன் என் ஆண்டவரே
என்னை மன்னியும்
என்னை மன்னியும் என் இயேசுவே

2. என் பாவ பாதையில் நான் போகையில்
என் உள்ளம் செத்துப்போனது
உம் அன்பை நான் நினைக்கவில்லையே
என் அந்நிய ஸ்நேகமும் என் சிரிப்பும்
என் ஆபத்தாய் மாறியது
உம் தஞ்சம் தேடி வந்தேன் இயேசுவே

-----------------

## Song 9

1. உந்தன் பாதம் வந்து நிற்கிறேன்
ஏழையான என்னை பாருமே
எந்தன் வாலிபமும், எந்தன் இளமையும்
உமக்கே அர்ப்பணிப்பேன்

2. நான் மெய்யாகவே கொடும் பாவிதான்
என்னை மன்னியும் கெஞ்சிக்கேட்கிறேன்
துணிந்து செய்தேன், மீண்டும் விழுந்தேன்
என்னை நிற்க செய்யுமே... உமக்காய் வாழ செய்யும்

3. உம்மை நம்பி இங்கு வந்துள்ளேன்
என்னை கழுவி சுத்தமாக்குமே
உம் திரு இரத்தத்தால் உந்தன் காயங்களால்
என்னை உருமாற்றுமே

4. உந்தன் பிள்ளையாக மாறுவேன்
உமக்காக என்றும் வாழுவேன்
உம் திரு வழிகள் உந்தன் வார்த்தைகள்
முற்றுமாய் கீழ்ப்படிவேன்

-----------------

## Song 10

1. Jesus! The sweetest name I've ever ever known
Jesus! The mighty name that melts the heart of stone
Jesus! He's by my side whenever I'am alone
Jesus! He is mine

2. Jesus! The name that heals the sad and troubled mind
Jesus! The greatest treasure ever you can find
Jesus! My dearest friend so loving and so kind
Jesus! He is mine

Every knee shall bow ... Every tongue confess
That Jesus Christ is Lord
Hear the heavens triumph ... As all the Earth proclaims
That Jesus Christ is Lord

3. Jesus! The one who trod the shores of Galilee
Jesus! He tore away my chains and set me free
Jesus! Just sing that name and see the devil flee
Jesus! He is mine

Forever and ever - 2
He is mine

-----------------

## Song 11

Keep on singing till the power of the Lord
Comes down comes down on you
Keep on praising till the presence of the Lord
Descends descends on you - 2

Praise until Your praises fill the heavens
Sound of victory revival fills the air
We've got to see Your holy fire sweep across the land
So sing till the power comes down - 2

-----------------